1972 சனவரி 28]

மின் துறையில் அங்கீகாரம் பெறாத சங்கம்

* 106 வினா.—திரு. என். மருதாசலம் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலகத்திற்குள் அங்கீகாரம் பெறாத சங்கம் விழா ஏதேனும் சமீபத்தில் நடத்தியுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

மதுரையிலுள்ள வாடகைக் கார்கள்

* 107 வினா.—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மதுரையில் இதுவரை டாக்சி, ஆட்டோரிக்ஷாக்களுக்கு கட்டணத்தைக் காட்டும் மீட்டர் பொருத்தப்படவில்லை என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, மதுரையில் டாக்சிகளும், ஆட்டோரிக்ஷாக்களும் மீட்டர் இல்லாமல் ஓடுகின்றன. அதனால் பேரம் பேசும்போது தகராறுகள் ஏற்படுகின்றன. ஆகவே, அதை தவிர்க்க, மதுரையின் எல்லைக்குள்ளாவது மீட்டர் பொருத்த வேண்டும் என்று அரசு ஆணையிடுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மதுரை எல்லைக்குள் 59 டாக்சிகளுக்கும், 11 ஆட்டோரிக்ஷாக்களுக்கும் மீட்டர் பொருத்தப்பட்டிருக்கிறது. மதுரையின் சுற்றுப்புறத்தில் ஓடும் வண்டிகளுக்குத்தான் மீட்டர் பொருத்தப்படவில்லை. மதுரை, திருச்சி, கோவை போன்ற பெரு நகரங்களில் ஓடும் வண்டிகளுக்கு மீட்டர் பொருத்த வேண்டும் என்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது.

சென்னையில் கார்களின் வேகம்

* 108. வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னை மாநகரில் கார்களின் வேகத்தை சாலைகளிலிருந்து கண்டு பிடிக்க புதிய கருவிகள் பயன்படுத்த அரசு ஆலோசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கார்களின் வேகத்தை தெரிவிக்கும் ரேடார் கருவி 1971 ஆகஸ்டு மாதம் முதல் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதைத் தவிர வேறு புதிய கருவிகள் பயன்படுத்த குறிப்புகள் எதுவும் இல்லை.